www.tamilarangam.net

# சுமைகள்

# BURDEN

இதழ் உ



மைகள் 1

தமிழ் மன்றம் (தெ.கி.லி)- நெதர்லாந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வாசகப் பெருமக்களுக்கு

எமது உளம் கனிந்த

நத்தார்

புதுவருட

வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்கின்றேம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எமது எண்ணங்கள்

காலத்திற் கொவ்வாத சித்தாந்தங்களை படித்த சிலர் அதை அப்படியே இப்போதும் கைக்கொள்ளப்பார்க்கின்றார்கள். குறிப்பாக ஸ்டாலின் தனது காலத்தில் புத்திஜீவிகளை கொன்றொழித்தார். அதையே இன்றும் பின்பற்ற நினைப்பது புத்திசாலித்தனமா? பாரிய அறிவுள்ள ஒரு சமூகத்தை தனி ஒருவன் அறிவு கொண்டு பாலிக்க முடியுமா? ஆயுதத்தால் ஏற்படுத்திக் கொண்ட அதிகாரங்கள் உலகில் எங்கும் நிலைத்திருந்ததாக வரலாறில்லை. ஆயுதம் கொண்டு எதையும் சுலபமாக அழிக்கமுடியும், ஆனால் அழித்ததை திரும்பப் பெறமுடியாது. அறிவைப் பயன்படுத்தி, அழிக்க விரும்புவதை ஆக்கத்திற்கு பயன்படுத்துவது புத்திசாலித்தனமான முறையாகும். ஆனால் ஆயுதமே கைவந்த கலையானால் ....... அறிவு ........ அறிவைப்பயன்படுத்துகின்றவன் அழிவைத் தடுக்கின்றான். ஆயுதத்தை பயன்படுத்துகின்றவன் அழிவைத்தான் பெருக்க முடியும். மக்களின்றி மண்ணில்லை, மண்ணின்றி மக்களில்லை எனவே மண் மீட்கப்படும் போது மக்கள் வேண்டும்.

ஐரோப்பிய மக்கள் எதை எப்படிச் சொல்கின்ற போதும் இன்று பொருளாதாரத்தில் முன்னணி வகித்து அபிவிருத்தி அடைந்த நாடுகள் என்ற பெயரை எடுத்த போதும் இரண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டாம் உலகயுத்த காலத்தில் ஏற்பட்ட கலாச்சார சீரழிவுகள் இன்றுவரை நிலைத்து இப்போதும் நாகரீகமென்ற போர்வையில் நடமாடுகின்றன. தனித்தனி ஒவ்வொரு வெள்ளையர்களைச் சந்தித்து உரையாடுகின்றபோது அவர்களின் மனங்களில் உறங்கிக் கிடக்கும் கவலையுணர்ச்சிகளைப் புரிய முடிகின்றது. அப்படியிருந்தும் இறுதியில் அதே அவர்களின் கலாச்சாரமாகின்றது.

ஈழத்தமிழ் மண்ணில் நடந்து கொண்டிருக்கும் போராட்டமும் இப்படியொரு நிலையைத் தோற்றுவிக்குமா? நிச்சயமாக? பொருளாதார நோக்குடனும், போர்நிலைமை காரணமாகவும் பெருந்தொகையான இளைஞர்கள் பல நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மற்றைய இனத்தவர்களை விட எம்மினத்தவர்களுக்கு அந்நிய மோகம் அதிகம். இந்த மோகமானது இதுவரை அதிகமாக எம்மக்களைப் பாதித்துக் கொண்டுதானிருக்கின்றது. இந்த மண்ணில் உள்ள தமிழர் பலர் தமிழன் என்ற பெயரில் நடமாடும் "செயற்கை ஐரோப்பியர்களாக வாழ்கின்றனர். தமிழ் ஈழம் என்பது அவர்களுக்கு மறந்தாகி விட்டது. தமிழ்க் கலாச்சாரம் என்றால் என்ன என்று கேட்குமளவிற்கு மாற்றங்கள் தென்படுகின்றன. இது ஒரு கவலைக்குரிய விடயமேயாகும்.

- நன்றி -

- ஆசிரியர் குழு -

www.tamilarangam.net



## உண்மை உணர்ப்பரப்பின் உல்லாச உணங்கள்

வாகனங்களுக்கு வக்கற்ற வன்னிப்பழம் ஒழுங்கையிலே
ஒரு கல் இருந்தது;
ஆடிக்கொண்டு அதனருகேபுல் வளர்ந்திருந்தது
முள் ஒன்றும் முனகிக்கொண்டு இருந்தது:

ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாளும், படுத்துக் கொ
ள்ளும் முன்பும், நித்திரையிலும், விழித்துக் கொ
ள்ளும் வேளையிலும், வேண்டாத கண்ணில்
வேதனைக் கனவுகளை கற்பனை செய்து;
வீண்கதைகளைச் சாய்விட்டு;
தம்மைக் காயப்படுத்திக் கொண்டன;

வக்கனை அத்தியாயங்களை அடுக்கி அடுக்கி.....
வசை புராணத்தை நீட்டி நீட்டி வளர்த்து.......
காயப்பட்ட எண்ணங்களால்
வேயப்பட்ட தாழ்வாரத்தில் ஒதுக்கிக்கிடந்தன

வாகனங்களுக்கு வக்கற்ற அந்தத் தெருவால்
வருகின்ற வெறுங்கால்களைப் பொறாமையோடு,
முடமானமூன்றும் மூகத்தை மூடிக் கொள்ளும்
கூனிப்போன இவற்றிற்கு
விஞ்ஞானச்செட்டை விண்முகட்டைத்
தூசி தட்டுவது வெறும் வெற்றுப் பேச்சோடு சரி

www.tamilarangam.net

இவற்றின் மேடை இலக்கியத்தில்
இயங்கும் கால்கள் பொது எதிரியாகின
கால்களைக் கடிக்கவே அவை காத்திருந்தன
இவனுள்ள கால்களின் காயம்
ஊமை ஊர்ப்பரப்பின் உல்லாச ஊனங்களுக்குத்
தேவைப்பட்டன.
இவற்றினுள், இதயத்தை இந்த இரத்தம் இனிக்
கர்ப்பமிருமோ?

ஆனாலும், கால்கள் நடந்து கொண்டன
செருப்புக்கால்கள் பள்ளி சென்றன -
- புல்லு இணைந்து கொண்டது
சப்பாத்துக்கால்கள் பின்னர் கல்லூரி சென்றன
- கற்கள் கடிந்து கொண்டன:
பூட்ஸ்கால்கள் இராணுவ முகாம் சென்றன
முற்கள் முகம் கோணிப் போயின:
தொடர்ந்து, வெறும் கால்கள் இந்த வீதியால் இமத்து…
நோக்கிக் காய்த்துப் போயின.
அந்த மூன்றும் இனி மட்டம் தட்டப்பட,
இயந்திர ஆலைகளின் சில்லுத்தடம் பதியப்பட
இனிக்காலம் வந்துவிட்டது.

ஆக்கம்
- நடராஜா கண்ணப்பு -

குறிப்பு:- மூன்றாம் மண்டல நாடுகளின் முரண்பாட்டுச் சிந்தனைவாதிகளின் பதவிப்போட்டியும், பொருளாதார விஞ்ஞான அபிவிருத்தியின்மையும் இங்கு கவிதையின் கருவாக சித்தரிக்கின்றது.

www.tamilarangam.net



# மதவெறியா? மனிதநேயமா?

மதங்கள் ஒவ்வொன்றும் மனிதர்மங்களையே போதிக்கின்றது. ஆனால் மனிதனானவன் நடைமுறையில் அதனை வைத்துக்கொள்ளாமல் நாலுகால் பிராணிகளைப் போன்று நாகரீகமற்ற முறையில் நடந்து கொள்கின்றான். மதம் மனித வாழ்வுக்கு தேவையாகின்றது. ஆனாலும் அவர் 'மதம்' கொண்டு ஏன் நடக்க வேண்டும். மதவெறிகொண்டு மதம் வளரவேண்டுமா? அப்படியான ஒரு சம்பவம் இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடந்தது. இந்துக்களின் பிரசித்தி பெற்ற ஸ்தலமாகிய அயோத்தியின் வீதிகள் தோறும் காவல்துறையினர் அசம்பாவிதங்களை எதிர்கொள்ளத் தயாராக நின்று கொண்டிருந்தனர். அங்கு 462 வருடங்களாக இருக்கும் பாபிரி மசூதியை நோக்கிச் செல்லும் தீவிரவாத இந்துக்களது ஆர்ப்பாட்ட உணர்வலைகளைத் தடுக்கும் அரசாங்கத்தையோ, அல்லது நீதிமன்றங்களையோ, அல்லது காவல்துறையினரையோ தாங்கள் உடைத்தெறிவோம் என சவால் விட்டிருந்தனர். மசூதியின் நடுப்பகுதியில் இந்துக்களின் தெய்வமான இராமர் பிறந்ததாக இந்துக்கள் கருதும் அதே வேளை அம் மசூதியிருக்கும் இடத்தில் இராமர் ஆலயம் அமைக்க வேண்டுமென்பதே அவர்களின் நோக்கமாகும். அந்தத் தெய்வீக இடத்தினை அடைய கடந்த சில நாட்களாக ஆயிரக்கணக்கான இந்துத்தீவிரவாதிகள் எடுத்த முயற்சியில் குறைந்தது 60.000

www.tamilarangam.net



பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மசூதியின் அருகே இருந்த தீவிரவாதிகளின் தொகை பல்லாயிரக்கணக்காக அதிகரித்தது. அப்பகுதியின் கோவில்களைச் சேர்ந்த சாதுக்களும் இந்துக்களின் நிறமான காவியுடை தரித்த சிலரும் அங்கு திரண்டிருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர் கற்களால் எறிந்து காவல்துறையினரை தாக்க ஆரம்பித்தனர் " நீங்கள் உங்கள் மதத்தையும் நாட்டையும் காட்டிக் கொடுப்பவர்கள் " எனக் கோஷமிட்டனர். காவல்துறையினரது கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகம் போன்றவற்றையும் தாண்டி மசூதியை நோக்கி தமது ஊர்வலத்தினை தொடர்ந்தனர். அவர்கள் சென்ற பாதையெங்கும் காவல்துறையின் ஜீப்புக்கள், பஸ்கள் எரிக்கப்பட்டு ஒரே புகை மண்டலமாக காட்சியளித்தது. மசூதியைச் சுற்றி அடைக்கப்பட்டிருந்த இரும்புக்கம்பி வேலியையும் உடைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளே நுழைந்தனர். காவல்துறையினர் ஜனக் கூட்டத்தை நோக்கித் தயாராக இருந்த இயந்திரத் துப்பாக்கியை உபயோகிக்கவில்லை. அவர்களைக் கடந்து சென்ற இந்துத்தீவிரவாதிகள் "மசூதியை உடை மசூதியை உடை" என்று கோஷமிட்டனர். சிறிது நேரத்தில் இரும்பு ஆயுதங்களாலும், கைகளாலும் மசூதியின் சுவர்களை உடைக்க ஆரம்பித்தனர். ஒரு சிலர் மசூதியின் வட்டமான கோபுரத்தின்

www.tamilarangam.net



ல் ஏறி அதில் தமது கொடிகளைப் பறக்க விட்டு கூரை
உடைக்க ஆரம்பித்தனர். 20 நிமிடங்கள் அமை
ாக நின்று கொண்டிருந்த காவல் துறையினருக்கு
தியாக ஆர்ப்பாட்டக்காரரை கலைக்குமாறு கட்ட
பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மசூதியும் அதனை
ற்றியுள்ள பகுதியும் அமைதியாகி அந்த நாள் இரா
க்கான வெற்றியுடன் முடிவடைந்தது. இது உண்மை
லயே இந்து நாகரீகத்தையும் குறிப்பாக இராமபிரா
யும் முன்வைத்து ஒரு இந்து இராச்சியத்தைக் கட்
யமைப்பதற்காக பாடுபட்டு கொண்டிருக்கும் ஒரு
வினருக்கு கிடைத்த வெற்றி என்றே சொல்லலாம்.

மதச்சார்பற்ற அரசியல் முறையைக் கொ
ட இந்தியாவின் அயோத்தியில் நடைபெற்ற
ர்முறைச்சம்பவங்கள் இந்தியர்களுக்கு அதிர்ச்சி
யும் இந்து-முஸ்லீம் மக்களிடையுள்ள விரோ
தை மேலும் வளர்க்கும் என்ற பயத்தையும் கொடு
ன. இப் பிரச்சனை காரணமாக இடம் பெற்ற
வரங்களில் ஏறக்குறைய 216 பேர் கொல்லப்பட்
னர். ஒரு ஒழுங்கற்ற அரசியலில் பழக்கப்பட்டு
ந்த இந்தியர்களுக்கு அண்மைக்கால சம்பவங்கள்
று அதிகமானதாகவே இருந்தன. இந்து தேசிய
தத்தின் வளர்ச்சியும், சாதிப் பிரச்சனை கலந்த அர
லும் இவற்றுள் அடங்கும். சில மாதங்களுக்கு
னர் திரு வி. பி. சிங் அரசபதவிகளில் 27%
டுக்கப்பட்டவர்களுக்காக ஒதுக்கப் போவதாக

www.tamilarangam.net



அறிவித்திருந்தார். பாரதீய ஜனதாகட்சி, இந்திரா
ங்கிரஸ் கட்சி என்பவற்றிலும் பார்க்க அவர் தாழ்
பட்டவர்களின் முழுமையான ஆதரவுகளைப் பெறு
ற்காக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைத்
இத்திட்டத்தினை எதிர்த்து பலதரப்பட்ட உயர்ஜாதியி
சேர்ந்தவர்கள் வன்முறை வழிகளில் ஆர்ப்பாட்
செய்ததுடன் ஒரு சில மாணவர்கள் தம் உயிரை
தாமே மாய்த்துக் கொண்டனர்.

இந்துக்களின் வாக்குகளை ஒன்று சே
-பதற்காக "பாரதீய ஜனதா கட்சி" விடா முயற்
எடுத்துவரும் வேளையில் திரு வி.பி. சிங்கின் இ
ஜ தந்திரம் இந்துக்களின் வாக்குகளைப் பிரிப்
கே வழிவகுத்துள்ளது என்று பாரதீய ஜனதா க
குற்றம் சாட்டியுள்ளதுடன் இதன் விளைவாக இக்
சியின் தலைவர் திரு. அட்வானி இந்து ஐக்கியத்
வலுப்படுத்தும் நோக்குடனும், அயோத்தியில் இரா
ஆலயம் அமைப்பதற்காகவும், கட்சியின் நலன் கரு
காகவும் 10.000 கி.மீற்றர் தூரத்திற்கு "ரத்யாத்
என அழைக்கப்படும் இந்து வார மத ஊர்வலத்தை
வழிநடாத்தினர். இதற்கிடையில் திரு வி.பி. சி
அந்த ஊர்வலத்தினையும், திரு. அட்வானியையும்
தடுக்கும் முகமாக திரு. அட்வானியை கைது செ
உத்தரவிட்டார். ஊர்வலத்தை அயோத்தி வரை
வழிநடாத்துவதாக ஆணையிட்ட திரு. அட்வானி
அதன் முடிவிடத்திற்கு முன்னரே கைது செய்ய

www.tamilarangam.net



ரு ஜனக்கூட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டார். இத
த் தொடர்ந்து பாரதீய ஜனதா கட்சி திரு. சிங்கி
சிறுபான்மை அரசுக்கு பாராளமன்றத்தில் தனது
தரவைத்தர மறுத்துவிட்டது.

மதத்தை வைத்து அரசியல் லாபம் தே
பாரதீய ஜனதா கட்சியின் செயலாளர் கருத்துத்
ரிவிக்கையில் திரு வி.பி. சிங் இந்திரா காந்திய
விட பயங்கரமானவர் ஏனெனில் அவர் இந்துக்க
ப் பிரிக்கின்றார் என்று கூறினார். மற்றுமொரு அரசி
அத்வானியின் கருத்துப்படி "அரசியல் அமைப்பை
, ஒழுங்கையும் மறுசீரமைக்க முயன்ற பிரதமரே
றக்குப் பலியாகி விட்டார் என்ற வகையில் திரு. வி
சிங் சரித்திரத்தில் இடம் பெறுகின்றார்". இந்திரா
ங்கிரஸ் கட்சியின் ஒரு பேச்சாளர் உரையில் இந்தி
வில் ஜாதி உணர்வுகளைத் தட்டி எழுப்பிவிட்டால்
கமே ஆயிரம் துண்டுகளாக பிரிந்து போய்விடும்
ன்றார். 1989 தேர்தலில் பா. ஜ. கட்சி லோக்
பயில் தனது ஆசனங்களை 2 இலிருந்து 86 ஆக அதி
த்ததையும், இவ்வருடம் இருமாநிலங்களில் இட
பெற்ற தேர்தல்களில் ஈட்டிய வெற்றியையும்
ர்க்கும் போது இந்து தேசீயவாதிகளின் வளர்ச்சி
த்தளவில் உள்ளது என்பதை நன்கு புரியக்கூடியதா
புள்ளது. இவர்கள் அரசு அமுல்படுத்திய சிறுபா
ன்மையினருக்கான சலுகைகள், குறிப்பாக முஸ்லீம்
ன் தமது வாழ்க்கை முறைகளைப் பின்பற்று

www.tamilarangam.net



வதற்கான உரிமைகள் போன்றவற்றை எதிர்க்கின்ற
கள். இது முஸ்லீம்களை இந்தியசமூகத்திலிருந்து அ
ப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்று பாரதீய ஜன
கட்சி விமர்சிக்கின்றது. இவர்கள் விரும்பும் இந்
இராச்சியத்தில் முழு இந்தியர்களும் இந்து முறை
வழிபாடு செய்யாவிடினும், எல்லோரும் இராம
மதிப்புக் கொடுக்கவேண்டும் என்று எதிர்ப
ர்க்கின்றார்கள். பாரதீய ஜனதா கட்சியின் வெ
ற்றிக்கான காரணம் என்னவெனில் இந்து கலாச்
சாரத்தைப் புனரமைப்பதற்காக உருவாக்கப்பட்
ஒரு குழுவினதும், இராமர் மீதுள்ள நம்பிக்கை
ஐக்கியப்படுத்தி, இந்து சமூகத்தில் உள்ள சாதி
முறையையும், மற்றைய பிரிவுகளையும் நீக்கி இ
இராச்சியம் அமைத்தல் என்ற குறிக்கோளுடன்
செயற்படும் மற்றுமொரு குழுவினதும் ஆதரவுகள் முழு
யாக கிடைத்துள்ளமையேயாகும். இந்தியாவில் பல
யங்களை இந்துக்கள் வழிபட்டு வந்துள்ளார்கள். த
போது இராமர் வழிபாடானது நாடு முழுவதும்
பரவியுள்ளது.

முஸ்லிம்களுக்கும், மற்றைய சிறு
ன்மையினருக்கும் கிடைத்த விசேட உரிமைகள்
க்கப்படவேண்டுமென இந்துத்தீவிரவாதிகள் வலியு
த்துவதுடன், முஸ்லீம்கள் இந்தியாவுக்கு மதிப்பு
கொடுப்பதில்லையென்றும், அவர்களுக்கு கிடைக்
அரசு உதவிகளுக்கு தகுதியற்றவர்கள் என்

www.tamilarangam.net



மேலும் இந்திய - பாகிஸ்தானுக்கிடையே நடக்கும்
கிரிக்கெட் ஆட்டங்களில் கூட முஸ்லீம்கள் பாகிஸ்தா
னுக்கு ஆதரவளிக்கின்றார்கள் என்று குற்றம் சுமத்த
படுகின்றது. இவர்கள் ஒன்று கூடும் இடங்களில்
முஸ்லீம்களுக்களுக்கான ஒரே இடம் பாகிஸ்தான் அல்லது
சுடுகுழி" என்ற சுலோகத்தை கேட்கக்கூடியதாகவு
ள்ளது.

அடுத்து வரும் பொதுத்தேர்தலில் திரு.வி.
. சிங் வெளிக்கத்திற்கும், மனித நேயத்திற்கும் துணை
நிற்பார் என்பதில் ஐயமில்லை. அதே சமயம் மதத்தை
ஊடும் முதன்மையாக வைத்து ஒரு நாட்டை கட்டியெ
ழுப்புவதற்கு பாரதீய ஜனதா கட்சி எடுக்கும் முயற்
சிகளை நிச்சயமாக எதிர்ப்பார். பாபிரி மசூதியை பாது
காப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகளுக்காக, இந்தி
யாவிலுள்ள 96 மில்லியன் முஸ்லீம்களின் வாக்குகள்
திரு. வி.பி. சிங்கிற்கு கிடைத்தாலும், நாட்டின் மற்றைய
பகுதிகளிலுள்ள பணவீக்கம், பொருளாதார மந்த நிலை
போன்ற பிரச்சனைகளையும் நிச்சயம் எதிர்நோக்கு
வார். இந்தியா எதிர்காலத்தில் நாட்டை சின்னாபி
ன்னமாக்கும் கோடிக்கணக்கான சக்திகளுக்கு முகம்
கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளது. என
வே இந்தியாவின் ஜனநாயகம் நாட்டை நல்லபடி வழி
நடத்துவதற்கு ஏற்றபடி பலமுள்ளதாகவும், உயிருள்ளதாகவும்
இருக்கவேண்டும்.

ஆதாரம் :- "டைம்" தொகுப்பு :- சிவா

www.tamilarangam.net



# காலமகளின் கோலமிது

கண்ணீர் விடும் இந்நிலைகளிது
கன்னியவள் விதிகளிது
காதல் செய்த பாவத்தினால்
கதறி நிற்கும் கோலமிது
வரதட்சணைக் கொடுமையிது
வாழ்வின்றி தவிக்கும் நிலையிது
கண்ணீரை மட்டும் பரிசாக எடுத்து
காலமெல்லாம் அழும் பேதையிது
ஏழைகளின் வயிற்றில் பிறந்து விட்டால்
ஏளனங்கள் செய்யும் உலகமிது
காடையர்களின் வெறித்தனத்தினால்
கற்பு பறிபோன பெண்மையிது
வஞ்சித்த இந்த சமுதாயத்தினிலே
வசந்தமின்றி வாழும் உள்ளமிது
சீர் கெட்டுப் போன சமுதாயமிது - இன்னும்
சீதனம் வாங்கும் முறையிது
கானல் நிறைந்த வாழ்வுகளிது
கண்ணீரால் எழுதும் கோலமிது
வேதனைகள் நிறைந்த உலகத்தினிலே
பேதையிவள் வாழும் வரம்பிது
கணவனை இழந்தால் விதவையிது
கடைப் பிடிக்காமல் மாறும் நிலை எப்போது?
மூட நம்பிக்கைகளை வளர்த்து - வீட்டில்
முடங்கிக் கிடக்கும் உள்ளமிது

www.tamilarangam.net



நிர்க்கதியான இந்த வாழ்வுகளுக்கு
நிலையான இடம் எப்போது ?
மேடையில் பேசியதில் பயனேது- வாழ்வுதனை
மேம்படுத்தும் நிலையில் உள்ளவரேது
காலமெல்லாம் அழும் இந்த ஜீவன்களுக்கு
காவல்கள் தொடுப்பவர் யாரோ .....

ஆக்கம்
க. ஸ்ரீதாஸ்
வாண்ட் கிறவ்

எமது சஞ்சிகையான "சீமைகள்" எதிர்வரும் தைத்திருநாளையிட்டு சிறப்பு இதழாக வெளியிட தீர்மானித்திருப்பதனால் உங்களிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகளை எதிர் பார்க்கின்றோம். எனவே தாமதமின்றி உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்

- ஆசிரியர் குழு -

www.tamilarangam.net



## எமது நாடு

சென்ற இதழ் தொடர்ச்சி

தமிழர்களின் கல்வியறிவு, ஆற்றல்களைக் கண்டு மனம் சகிக்காது கல்விதனை சீர்குலைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் "தரப்படுத்தல்" என்ற முறையினைக் கொண்டு வருகின்ற சந்தர்ப்பத்திலும், அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட வேளையில் எம் நலன்களுக்காக இயங்கிக் கொண்டிருந்த தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி இப் பிரச்சனைக்கு தீர்வு காணும் நோக்குடன் தமிழர்களுக்கென தனி அரசு வேண்டுமெனவும், இழந்த மண்ணை மீட்கப்பட வேண்டுமெனவும் தீர்மானித்த இதற்கூடாகத்தான் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்று அரசியல் கட்சிகளானது பேச்சு வார்த்தை மூலம் ஒரு தமிழ் ஈழத்தை அடைய முயன்றன அதே நேரம் தமிழர்களுக்கெதிராக 1977, 79, 81ம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்களினால் தமிழினமானது பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் உடைமைகளையும் பறிகொடுத்தது.

இதன் பின்பு பேச்சு வார்த்தைகள் மீது வெறுப்பும் சலிப்பும் கொண்ட தமிழ் இளைஞர்கள் குழுக்களாக திரண்டு சிங்கள அரசுக்கெதிராக 1983ம் ஆண்டு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதன் போது ஏற்பட்ட இனக்கலவரமானது உலகத்தையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கலங்க வைத்தது. இதன் தாக்கமே தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கான காரணமாகும். இக் கலவரங்களினால் அதிகமான தமிழர்கள் இடம் பெயர்ந்ததோடு அகதிகளாக வெளிநாடுகளுக்குச் செல்லத் தொடங்கினார்கள்.

இவ்வாறு தமிழ் இளைஞர்கள் போராடி வரும் வேளையில் எமது மக்களுக்கிடையில் ஒற்றுமையின்மை காரணமாக கோடரிக் காம்புகளைப்போன்று தமிழர்களே தமிழர்களை கொலை செய்தனர். இச் செய்கையானது எமது போராட்டத்தை பின்னடைந்துச் சென்றதோடு தமிழினத்திற்கு உலக அரங்கில் ஒரு இழிவான பெயரைக் கொடுத்தது. பிற்பாடாக 1987ம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர்களுக்கு உதவி புரியும் போர்வையில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. எமது நாட்டிற்கு அமைதி வந்துவிட்டது என பலரும் நினைத்தனர். ஆனால் இந்திய இராணுவத்தின் அநாகரிகமான செயற்பாடுகளினால் எமது இளைஞர்களுக்கும், இவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மோதல்களுக்கே வழி வகுத்தது.

இந்திய இராணுவமானது தமிழ் பெண்களை கற்பழித்தமையும், பல சொத்துக்

www.tamilarangam.net



களை சூறையாடி பல அழிவு வேலைகளைச் செய்தன் மூலம் எமது மக்களிடமிருந்து வெறுக்கப்பட்டு தமிழ் சிங்கள மக்களினால் வெளியேற்றப்பட்டனர்.

தற்போது எமது நாட்டில் நடக்கும் பிரச்சனையானது கடந்த ஆண்டுகளில் நடந்ததைப் போன்று தமிழ் இளைஞர்களுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் படு மோசமான முறையில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இலங்கை அரசானது முன்பு போல் அல்லாது வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்த தொடர்புகளை துண்டித்து, எமது தமிழ் மக்கள் உறங்க இடமின்றி, உண்ண உணவின்றி, மின்சாரமின்றி மாதக்கணக்காக பதுங்கு குழிகளில் இருக்கும் நிலைக்கும் உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

குறிப்பாக எமது நாட்டின் இன்றைய நிலையில் மக்களின் நாளாந்த வாழ்க்கையும் பொருளாதாரமும் சீர்குலைக்கப்பட்டு நாட்டின் பல பாகங்களிலும் எமது மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். இந் நிலை நீடிக்குமானால் எம் மக்களின் வாழ்வு எப்படி அமையப் போகின்றதோ என்று புரிய முடியாமல் இருக்கின்றது.

ஆக்கம்
சு. ரவிந்திரன்
"சிற்றட்"

www.tamilarangam.net



## சுத்தமான நீரைச் சுத்திகரித்தல்

மியில் தேவைக்கு அதிகமானளவு நீர் இருக்கின்ற
றலும் அதில் ௨.7%. மான நீரே குடிநீராகப் பாவிக்
படக் கூடியதாகயிருக்கின்றதென அளவிடப்பட்டுள்ள
இவ் ௨.7% மான நீரில் நூற்றுக்கு ஒருபங்குதான்
நீராவும், விலங்குகளாவும் உபயோகப்படுத்தப்
வருகின்றது. இந் நீரை நாம் ஏரிகள், ஆறுகள்
ங்கள், கிணறுகள், குட்டைகள், என்பவற்றிலிருந்து
ற்றுக்கொள்கின்றோம்.

இவற்றில் பல பாகங்களில் காணப்படும்
னது அசுத்தமாக்கப்படுவதற்குரிய காரணம் இலட்ச
க்கான மக்கள் வாழும் நகரங்களிலிருந்தும், தொழிற்
களிலிருந்தும் வரும் கழிவு நீரானது மேற்குறிப்பி
வைகளுடன் கலக்க விடுவதனாலோ அன்றி நாம் வா
வசிப்பிடங்களுக்கு அருகாமையில் தேங்கியிருப்
வையோ நீரானது அசுத்த மடைவதை நாம் நேரடியாகக்
ணக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக நாம் அன்றாட
த்தேவையின் தேவைகளுக்கு நன்நீரைப் பாவிப்பதன்
ம் அந்நீரை அசுத்தமாக்கின்றோம். இவற்றை விட
தொழிற்சாலைகளில் இயங்கும் இயந்திரங்களைக் குளி
செய்வதற்கும், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும்
ழிற்சாலைகளைச் சுத்தம் செய்வதற்கும் நாம் தூய
ரைப் பயன்படுத்தி இறுதியில் அசுத்த நீரையே பெற்று
கொள்கின்றோம்.

மழை நீரானது பூமியின் பரந்து பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்பரப்புக்களில் வீழ்வதனை தெருக்களிலும், நில
களிலும், கட்டிடங்களின் கூரைகளிலும் வீழ்ந்து
இந் நீருடன் சேர்வதனை இக் கழிவு தண்ணீரான
சாதாரணமான கழிவு தண்ணீருடன் கலக்கப்படுகின்ற
குழாய்கள் மூலமாக வரும் கழிவு நீரை நாம் ஆறுகளி
குளங்களிலும் தேக்கி வைப்பதனை ஏற்கனவே அறி
நீரோடு இந்நீரும் அசுத்தப்படுவதுடன் இவைகளிலிருக்
மீன்களும், அந் நீரை அருந்தும் பறவைகளும் இறக்
நேரிடுகின்றது. இது மாத்திரமன்றி இவ் அசுத்த நீ
மூலம் பல தொற்று நோய்கள் வருவதற்கு வாய்ப்புக்க
இருக்கின்றது. உதாரணமாக ஒரு சில நோய்களை
விளைவிக்கும் பூச்சி இனங்கள் தங்கள் வாழ்க்கை வ
-டத்தின் ஒருபகுதியினையோ அன்றி பல பகுதியினையே
அசுத்தமான நீர்ப்பரப்புக்களில் தான் நடைபெறச் செய்
-கின்றன. அத்தோடு நீரில் அதிகளவு நீர்த்தாவரங்களும்
அதனருகே வாழும் தரைத்தாவரங்களும் இறப்பதற்கு
காரணமாகின்றன.

இப்படியான கழிவு நீரினை எதிர்கா
த்தில் நாம் மிகவும் மோசமான அழிவுகளை எதிர்நோக்
வேண்டியிருக்கின்றது. எனவேதான் இப்படியாக உருவா
கழிவு நீரை நாம் ஏதோ ஒரு வழியில் சுத்திகரித்து, நீரி
நல்ல தன்மையை பாதுகாக்க வேண்டிய நிலைக்காளாகி
ன்றோம். இப்படிச் சுத்தமாக்கப்பட்டு வரும் நீரை நாம்
எமது விவசாயத்திற்கும், இயற்கை வளங்களுக்கும், மிரு
ங்களின் குடிநீராகவும், பாவிப்பதன் மூலம் பயன்பெ

www.tamilarangam.net



யான அழிவுகளிலிருந்து தப்பிக்கொள்ளமுடிகின்றது. இவ்வாறு உருவாகும் கழிவு நீரின் பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கு ஒருத ரீவாந்தில் சுத்திகரிப்பதற்கு கையாளப்படும் முறையின் சுருக்கத்தை இங்கு குறிப்பிடுகின்றோம்.

ஒவ்வொரு வீட்டிலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும் வரும் கழிவு நீரானது குழாய்கள் மூலமாக சேகரித்து அவற்றைச் சுத்திகரிக்கும் ஆலைக்கு கொண்டு சென்று அவ் அசுத்த நீரில் காணப்படும் பெரிய பொருட்களாகிய பிளாஸ்டிக், மரத்துண்டுகள், இறப்பர், இரும்புத்துண்டு, கடதாசிகள் என்பவற்றிலிருந்து கழிவுப்பொருட்கள் வலை ஒன்றின் உதவியினால் அள்ளப்பட்டு இக்கழிவானது சாதாரண குப்பையுடன் சேர்க்கப்படும். இதன் பின்பு இரண்டாவது படிமுறையாக ஓர் இயந்திரத்தின் உதவி மூலம் இக்கழிவு நீரை உயரத்திற்கு விசிறச் செய்யப்பட்டு அதன் போது உயரத்தில் ஏற்படும் வித்தியாசத்தின் அடிப்படையில் இக்கழிவு நீரானது இரண்டு பாகங்களாக பிரிக்கப்படும். ஒன்று பாரம் குறைவான அசுத்த நீர், இன்னொன்று பாரம் கூடிய அசுத்த நீர், இவ் பாரம் கூடிய அசுத்த நீரில் கூடிய பாகம் மணலே காணப்படும். இப்பாரம் குறைந்த அசுத்த நீரில் இயந்திரத்தின் உதவியினால் விசிறச்செய்யும் போது அத்தொட்டியிலிருந்து வழிந்து ஓடவிட்டு இன்னொரு தொட்டியில் சேர்க்கப்பட்டு இவ் அசுத்த நீரில் காணப்படும் பாரம் கூடிய பகுதியாகிய மணல் அந்நீர்த்தொட்டியின் அடியில் அடையச் செய்யப்பட்டு பின்பு அகற்றக்கூடியவாறு அந்நீர்த் தொட்டியானது அமைக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



இவ்வாறு சேகரிக்கப்பட்ட பாரமற்ற அழுக்கு நீரை உயிரியல். சுத்திகரிப்பதற்கு உட்படுத்தப்படுகின்ற போது இச் சுத்திகரிப்பானதே மிகவும் முக்கியமானதொன்றாகும். இவ் உயிரியல்ச் சுத்திகரிப்பின் போது இலட்சணக்கான பற்றீரியாக்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. இப் பற்றீரியாக்கள் தொழிற்படும் முறையை நாம் எமது சாதாரண கண்களால் பார்க்கமுடியாது. இவ் பற்றீரியாக்கள் தொழிற்படுவதற்கு இரண்டு பொருட்கள் தேவையாகின்றது. ஒன்று ஒட்சிசன் இன்னொன்று உணவு. அக் கழிவு நீரில் பற்றீரியாக்கள் தொழிற்படுவதற்குத் தேவையான உணவு காணப்படுகின்றது அதாவது இக்கழிவு நீரில் காபோவைதிரேற்று, கொழுப்பு புரதம், போன்றவை காணப்படுவதனால் இவற்றை பற்றீரியாக்கள் உணவாகப் பயன்படுத்துகின்றது. இப் பற்றீரியாக்கள் தொழிற்ப்படுவதற்குத் தேவையான ஒட்சிசன் செயற்கை முறைமூலம் உருவாக்கப்பட்டு நீருடன் கலக்கவிடப்படுகின்றது. அதனால் அப் பற்றீரியாக்கள் தொழிற்படுவதற்குத் தேவையான ஒட்சிசன் அந்நீரில் காணப்படுகின்றது. அதனால் பற்றீரியாவானது தனது தொழிற்பாட்டின் போது கழிவு நீரில் காணப்படும் காபோவைதிரேற்று, கொழுப்பு, புரதம் போன்ற உணவுப் பொருட்களை உணவாகப் பற்றீரியா உட்கொண்டு விடுவதனால் நீரிலிருந்த கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டு விடுகின்றது. ஆனால் அப் பற்றீரியாக்கள் அந்நீரிலேயே காணப்படும். இதன் போது இக்கழிவு நீரானது கிட்டத்தட்ட 72 மணித்தியாலங்கள் பற்றீரியாவின் தாக்கத்திற்கு உட்ப்படுத்தப் படுகின்றது. இவ் 72 மணி நேரத்திற்கு நீரில் காணப்படும்

www.tamilarangam.net



கழிவுகளையாவும் பற்றீரியாவினால் உணவாகக் உட்கொள்ளப்பட்டுவிடும். இதன் பின்பு இந் நீரானது இன்னொரு தொட்டியில் ஓடவிட்டு அங்கு சேமிக்கப்படும்.

இவ்வாறு சேகரிக்கப்படும் தொட்டியின் சிறப்பு என்னவெனில் பற்றீரியாக்களின் தாக்கத்தின் பின் நீரில் காணப்படும் அடைசல்கள் இத்தொட்டியின் அடியில் அடையவிடப்பட்டு இன்னொரு இயந்திரத்தின் உதவியினால் அள்ளப்படும் இப் பற்றீரியாவானது திரும்பவும் அசுத்த நீரை சுத்தமாக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. தூய நீரானது இத்தொட்டியின் மேற்பரப்பால் வழிந்து ஓடவிடப்பட்டு இன்னொரு தொட்டியில் சேகரிக்கப்பட்டு அங்கு தூய நீரானது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் ஆற்றில் ஓடவிடப்படுகின்றது. இத்தொட்டியின் அடியில் அடையப்பட்ட அடைசல்கள் இன்னொரு இயந்திரத்தின் உதவியினால் அள்ளப்பட்டு, அக் கருவிகளில் காணப்படும் பற்றீரியாக்கள் இன்னொரு கருவி மூலம் அகற்றப்படும். பின்பு இவ் அடைசல்களை ஒட்சியேற்றும் ஆலைக்கு எடுத்துச்செல்லப்படும் அங்கு பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவதோடு அவ் அடைசல்களுக்கு சில செயற்கை மருந்துகளைப் பாவித்து ஓரளவு கட்டியான தன்மைக்கு மாற்றப்பட்ட பின்பு இவ் அடைசல்கள் விவசாயத்துறைக்கு உரமாக பாவிக்கப்படுகின்றது.

இப்படியாகத் தொடர்ந்து வரும் அடைசல்கள் மூலம் உருவாக்கப்படும் உரமானது தொடர்ந்தும் ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டு அதில் ஏதாவது தீங்கு விளைவிக்கும் மூலகங்கள் காணப்படுமாயின் மீண்டும் சுத்தி

www.tamilarangam.net



கரிப்புக்கு உட்படுத்தப்பட்டு அதில் கொடிய மூலகங்கள் இல்லையென்ற சந்தர்ப்பத்தில்தான் கழிவுப் பொருட்களாக ஒதுக்கப்படுகின்றது. எனவேதான் நீர் சுத்திகரிக்கும் இலாகாவானது தமது சுத்திகரிக்கும் தன்மையை இலகுவாக்குவதற்கும், நீரின் தன்மையைப் பேணிப் பாதுகாப்பதற்குமாக சில முறைகளைக் கையாளுகின்றனர். அதாவது எமக்கு கிடைக்கும் கழிவுப் பொருட்கள் எல்லாவற்றையும் நாம் கழிவுநீர் ஓடும் குழாய்களில் போடுவதனால் நீரில் சில தீங்கு விளைவிக்கும் மூலகங்கள் சேர வாய்ப்பு உண்டாவதுடன் நீர் செல்லும் பாதையானது அடைத்து பல நேரத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகள் போன்று பயங்கர அழிவுகளையும் ஏற்படச் சந்தர்ப்பம் உண்டு. எனவேதான் பின்வரும் முறைகளைக் கையாளுவது சிறந்ததென நீர் சுத்திகரிக்கும் இலாகா கூறுகின்றது.

பொதுவாக கூடிய சலவைப் பவுடர்களைப் பாவிக்காது விடுவது, அரிக்கும் தன்மையுடைய இரசாயனப் பொருட்களை துப்பரவு செய்வதற்கு பாவிக்காது விடுவது பழுதுபட்ட மருந்துப் பொருட்கள், மோட்டார் வண்டிகள் பழுதுபார்க்கும் இடங்களிலிருந்து வரும் கழிவு எண்ணெய்கள், படம் எடுக்கும் நிலையங்களில் இருந்து வரும் இரசாயனக் கழிவுப் பொருட்கள், பெற்றோல், வர்ணப் பூச்சுக்கள் போன்றவை கழிவு நீருடன் சேர்க்காது விடுதல் என்பனவாகும். இப்படிப்பட்ட கொடிய மூலகங்கள் கழிவு நீரில் காணப்படுமாயின் இம்மூலகங்களை அகற்றுவது மிகவும் கடினமானதாகும். அத்தோடு இம் மூலகங்கள்

www.tamilarangam.net



எமது உடலுக்குள் சென்று சிறுநீரகத்தில் பாதிப்பு, புற்றுநோய் கள் உருவாகுவதற்கு அன்றி அவற்றை உள்ளாக்கிவிடுவதற்கா -ன சந்தர்ப்பம் உண்டு எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவேதான் நகர்வாழ்வைப் பொறுத்தமட்டில் சில சுற் றாடல்களைப் பாதுகாக்கும் சங்கங்களும், மாநகர சபைகளும் ஒன்றாக சேர்ந்து தொழிற்பட்டு வருகின்றன. இப்படியாக வரும் கழிவுப் பொருட்களைச் சேகரித்து அவற்றை இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி அவைகள் சூழல் அசுத்தமடையாத வகையில் பாதுகாக்கின்றன.




வில்லங்கம் வேலாயுதமும், இரைச்சல் கணபதியும் காட்டு வழியே சென்று கொண்டிருந்தனர். வில்லங்கம் வேலாயுதத்தின் கையில் "காட்டு மிருகங்கள் பற்றிய புத்தகமும் இருந்தது. இப்படியே சென்று கொ ண்டிருக்கின்றபோது குறுக்கே ஒரு சிங்கம் வந்து அவர்களின் எதிரில் நின்றது.

வில்லங்கம் வேலாயுதம்:- கணபதி நீ பயப்பிடாதே அந்தப் புத் தகத்திலே கிடக்கு "ஒரு சிங்கத்தைக் கண்டால் அசைய் யாமல் நின்று அதன் கண்களை நாமும் உற்று நோக்கினால் சிங்கம் திரும்பி ஓடிவிடுமாம்.

இரைச்சல் கணபதி:- இந்தச ஒருக்கா புத்தகத்தை தா பார்ப்பம் (வடிவாக பார்க்கின்றார்) ஓ., அப்படித்தான் கிடக்கு, அதுசரி நீயும், நானும் இந்தப் புத்தகத்தை பார்த்திருக்கிறம். ஆனால் இந்த சிங்கமும் வாசித்திருக்குமோ?

www.tamilarangam.net



## வாசகர்களிடமிருந்து ........

தமிழ்ச்சங்கமே
இதயங்களை இணைக்கும்
அன்புப் பாலமாய்
இலக்கிய நதியின் ஊற்றாய்
சுமைகளாய் எம்மைச் சுடுகின்ற
பேதங்கள் ஒழிய
நீ வாழ்க! நீ வளர்க!

க. நடராஜா
வாலிங்கன்

---

அன்பான ஆசிரியர்களுக்கு,

உங்களின் இதழ் கிடைத்தது. என் நன்றியையும், பாராட்டையும் தெரிவிப்பதோடு இதழானது தொடர்ந்து வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

E.M. லிங்கவீரன்
ஜேர்மனி

---

சுமைகள் ஆசிரியர் குழுவுக்கு,

பல சுமைகள் மத்தியிலும் சுமைகள் பத்திரிகையை சுமக்கவும், ஆவலாகவும் ஆர்வமாக உள்ள தோழர்களுக்கு பாராட்டுக்கள் பல. சர்வதேச அளவில் ஆக்கங்கள் காணப்பட்டது சந்தோஷத்தைத் தந்தது. — சுந்தியன் —
ஜேர்மனி

www.tamilarangam.net



# நெதர்லாந்தின் சனத்தொகை அதிகரிப்பு




நெதர்லாந்து புள்ளிவிபரவியல் தலைமைக்காரி யத்திலிருந்து அண்மையில் கிடைக்கப் பெற்ற செய்திக ளின்படி நெதர்லாந்தானது தனது 15 வது மில்லியோன் சனத்தொகையை அணுகிக் கொண்டிருக்கின்றதென அறிவி க்கப்பட்டுள்ளது. நெதர்லாந்தைச் சேர்ந்த சிலர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறப்பு சிறப்புப் புள்ளிவிபரவியலாளர்கள் அண்மையில் இது பற்றி கலந்துரையாடலில், ஒருவரின் கருத்தின்படி நெதர்லாந்து நெருக்கமான சனத்தொகையை கொண்டுள்ளதெனவும், ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இச்சிறிய நாடாகிய நெதர்லாந்து மிகக்கூடிய சனத்தொகை வீதத்தினைக் கொண்டுள்ளதெனவும் குறிப்பிட்டார்.

மேலும் இவர்களுக்கிடையே நடைபெற்ற கலந்துரையாடலில் முக்கியமாக எழுப்பப்பட்ட கேள்வி என்னவெனில் நெதர்லாந்து எப்போது 16 வது மில்லியன் சனத்தொகையை அணுகும் என்பதேயாகும். இவர்களின் கருத்தின்படி இக்கேள்விக்குரிய விடை சாதாரண சிந்தனைக்கு மிகவும் சிக்கலானதாகும். இப் புள்ளிவிபரவியலாளர்கள் தங்களுக்குள்ளேயே நெதர்லாந்து ஒரு மில்லியன் சனத்தொகையை எடுப்பதற்கு எவ்வளவு காலம் சென்றிருக்கின்றது என்று கேட்கின்றனர். அத்தோடு நெதர்லாந்து இரண்டு மில்லியன் சனத்தொகையிலிருந்து மூன்று மில்லியன் சனத்தொகையை அடைந்ததற்கான சான்றிதழ்களும் தங்களிடம் இருப்பதாக கூறுகின்றனர். அதாவது 1795 ஆண்டிலிருந்து 1844ம் ஆண்டு வரைக்குமிடையேயுள்ள 49 வருட காலங்களில் இவ் வளர்ச்சி நடைபெற்றுள்ளது. அதன் பின்பு 3 மில்லியனிலிருந்து 4 மில்லியனை அடைவதற்கு 35 ஆண்டுகள் பிடித்திருக்கின்றது. அதே போல 4 மில்லியனிலிருந்து 5 மில்லியனை அடைவதற்கு 18 வருடங்கள் பிடித்திருக்கின்றது எனவே இந் நிகழ்ச்சி

www.tamilarangam.net



உண்மையில் நடைபெறக்கூடியதொன்றாகும். காரணம் எவ்வளவு மக்கள் இருக்கின்றார்களோ அவ்வளவு தூரம் பிறப்பு வீதமும் கூடுகின்றது என இப் புள்ளிவிபரவியலாளர்கள் கூறுகின்றனர். இவ் வளர்ச்சி வீதமானது இரண்டாவது உலக யுத்தத்தின் பின்பும் இப்படியேயிருந்து வந்தது. ஆனால் 1957ம் ஆண்டிலிருந்து 1970 வது வரைக்கிடைப்பட்ட 13 வருட காலத்தில் சனத்தொகையானது 2 மில்லியனால் அதிகரித்துள்ளது. அச்சந்தர்ப்பத்தில் புள்ளிவிபரவியலாளர்கள் இரண்டாயிரம் ஆண்டளவில் சனத்தொகை 20 மில்லியோனை அணுகலாம் என எதிர்பார்த்தனர். ஆனால் இப்போது பார்க்கும் போது அது ஒருபோதும் நடைபெறமாட்டாது எனத் தெரிகின்றது. 1970 க்கு பின்பு 9 வருட காலங்களுக்குள் சனத்தொகையானது 14 மில்லியனை அடைந்துள்ளது இறுதியாக கணிக்கப்பட்ட 1 மில்லியன் சனத்தொகையை அடைவதற்கு 12 வருடங்கள் எடுத்திருக்கின்றன.

இன்றைய நிலையில் 2005ம் ஆண்டளவில் நெதர்லாந்தின் சனத்தொகை 16 மில்லியனை அணுகலாம் என்றும் 17 மில்லியன் சனத்தொகையை நெதர்லாந்து ஒருபோதும் அணுகமாட்டாது எனவும் இவ் ஆராய்ச்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர். காரணம் 21ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் சனத்தொகை குறைவதைப்போல நெதர்லாந்திலும் சனத்தொகை குறையும் எனக் கூறுகின்றனர். இப்படியான கணிசமான மாற்றத்திற்கு காரணம் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக மாற்றமின்றி வரும் சனத்தொகை வளர்ச்சியேயாகும் என

www.tamilarangam.net



இவ் இரண்டு புள்ளிவிபரவியலாளர்களும் ஏற்றுக்கொண்ட முடிபாகும்.

1900ம் ஆண்டிலிருந்து குறைந்து வரும் பிள்ளைகளின் பிறப்புவீதம் ஓர் பெண்ணுக்கு 4·4 வீதத்திலிருந்து 1·5 வீதமாகக் குறைந்துள்ளது. மேலும் இவ் ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி ஒரு நாட்டின் குடிமக்களில் குறைந்தது ஓர் பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள் என்ற வீதத்தில் இருக்குமாயின் அந் நாட்டின் சனத்தொகையை ஓர் மாறாத வீதத்தால் பேணிக்காக்கலாம். சாதாரணமான ஓர் பெண் பிள்ளை பெற்றுக்கொள்ளும் காலத்தை எடுத்துக் கொள்வோமாயின் கூடுதலான பெண்கள் 25 வயது வரும்போதுதான் தங்கள் முதலாவது பிள்ளையைப் பெற்றுக் கொள்கின்றனர். இது தற்போது 25 லிருந்து 30 ஆக அண்மித்துக்கொண்டு போகின்றது. அதேநேரம் பெரும்பாலான பெண்கள் பிள்ளைகள் இடைப்பதை விரும்பவில்லை. அவர்கள் சுதந்திரமாகவே இருக்க விரும்புகின்றனர். அதைவிட 30 அல்லது 35 வயதிற்கு பின்பு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வது சாதாரணமாய் இலகுவாக இருக்காதென இப்புள்ளிவிபரவியலாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு குடும்ப வாழ்க்கையை எடுத்துப் பார்க்கும் போது ஓர் குறிப்பிட்ட மக்கள் தனிக்குடித்தனத்தையே விரும்பி நடத்துகின்றனர். 1900ம் ஆண்டளவில் 5 மில்லியன் சனத்தொகையினர். 1 மில்லியன் குடும்ப வாழ்க்கையினை கொண்டிருந்தனர். ஆனால் இன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சனத்தொகை 3 மடங்காக அதிகரித்துள்ளது. குடித்தனம் நடத்துவோரின் எண்ணிக்கை 5 மடங்கால் அதிகரித்துள்ளது. 1900 ம் ஆண்டளவில் 100,000 மக்கள் தனிக்குடித்தனத்தை நடத்தினர். இன்று 1713.000 தனிக்குடித்தனத்தை நடாத்துகின்றனர். இத்தொகை முழுச்சனத்தொகையின் நாலில் ஒருபங்காகும். அம்சர்டாம் (AMSTERDAM) நகரத்தை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு இரு வீட்டிலும் ஒருவர் தனிக்குடித்தனம் நடத்துபவரையே காணலாம். இவர்களில் இளைஞர்களைவிட முக்கியமாக வயோதிபர்களே இவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கடந்த 20 வருடங்களை எடுத்துக் கொள்ளும் போது பிறப்புவீதமானது இறப்பு வீதத்தைவிடக் தாழ்ந்து கொண்டே போகின்றது. மேலும் இறப்பு வீதமானது கடந்த காலங்களில் ஓர் மாறாத எண்ணிக்கையாகவே காணப்படுகின்றது. ஒரு ஆணின் சராசரி வாழ்க்கைக் காலம் கிட்டத்தட்ட 75 வயது எனவும், ஓர் பெண்ணுடைய வாழ்க்கைக்காலம் 80 வயதிற்கு மேல் செல்கின்றது எனவும் அவர்கள் கூறுகின்றனர். நெதர்லாந்தில் ஒருவர் 65 வயதை அடையவில்லையெனின் அதற்குரிய காரணம் சாதாரணமின்றி மிகவும் மாறுபட்டதாகவே காணப்படுகின்றது. இப் பெண்களினுடைய வாழ்க்கைக் காலத்திற்கும் ஆண்களுடைய வாழ்க்கை காலத்திற்கு மிடையேயுள்ள வித்தியாசத்திற்கு காரணம் இன்னும் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்று இவ் ஆராய்வாளர்கள் கூறுகின்றனர். கடந்த 10 வருடங்களாக எடுக்கப்

www.tamilarangam.net



பட்ட புள்ளிவிபரவியல்களின் படி குடியேறுபவர்களின் எண்ணிக்கை மிகவும் உயர்ந்து கொண்டே போகின்றது. இவற்றைத் தெளிவாகப் பார்க்கின்றபோது அதில் ஒரு பகுதியினர் நெதர்லாந்தில் இருக்கமாட்டார்கள் எனத் தெரிய வந்துள்ளது. இவற்றை நாம் எமது நடைமுறை வாழ்க்கையில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மேலும் மத்திய தரைக்கடற்பிராந்தியத்திலிருந்து வேலைக்கு என வரவேற்கப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையினை நிலைப்படுத்திக் கொண்டதோடு தங்களுடைய குடும்பத்தினரையும் இங்கு வரவழைத்துள்ளனர்.

மேலும் உத்தியோகபூர்வமாக எடுக்கப்பட்ட புள்ளிவிபரவியல்களின்படி நெதர்லாந்து தேசிய இனத்தை விட சட்டப்படி இந்நாட்டில் இருக்கும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 600.000 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்குள் சட்டவிரோதப்படி வாழும் 100.000 வெளிநாட்டவர்களும் அடங்குவார்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மற்றைய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இத்தொகையானது அதிகம் இல்லை. இத் தொகை முழுச்சனத்தொகையின் 5% எனவும் இப் புள்ளி விபரவியலாளர்கள் கூறுகின்றனர்.

- மீதி அடுத்த இதழில் தொடரும் -

உன்னை நீ அறிந்து கொள்வதை விட
மற்றவர்களை முதலில் புரிந்து கொள்

www.tamilarangam.net



## செய்தித்திரள்கள்

நெதர்லாந்துத் தொலைபேசிச் செய்திகளின் படி ஈராக்கில் 1400 சிறுவர்கள் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக இறந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

---

இரசியாவில் உணவுத் தட்டுப்பாடு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. எதிர் வரும் கடும் குளிர் காலத்தில் இவ் உணவுத்தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக உருவெடுக்க விருக்கின்றது. ஜேர்மன் சான்சலர் கோல் இரசிய நாட்டிற்கு உணவு வகைகளைக் கொடுத்துதவும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். நெதர்லாந்தும் உணவு வகைகளை அனுப்ப முயற்சி எடுத்து வருகின்றது.

---

கடந்த 2.12.90ல் நடந்துமுடிந்த ஐக்கிய ஜேர்மனியின் தேர்தலில் C.D.U 43.8% வாக்குகளைப் பெற்றுக் கொண்டாலும் F.D.P யுடன் இணைந்தே ஆட்சியமைக்க வேண்டியுள்ளது. ஜேர்மன் ஐக்கியத்திற்கு சான்சிலர் கெல்மட் கோல்ல மூலகாரணம் என பேசிக்கொண்டாலும், அவர் சார்ந்துள்ள C.D.U க்கு தனியே ஆட்சியமைக்கும் அதிகப் பெரும்பான்மை கிடைக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net






உலகின் மிகப் பழமை வாய்ந்த ஜனநா-யக நாடான ஐக்கிய இராச்சியத்தின் முதலாவது பெண் பிரதமர் மார்க்கிரெட் தட்சர் கடந்த 22. 11. 1990 ல் தன் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இவர் உலக மக்களின் மத்தியில் "இரும்புச் சீமாட்டி" எனச் சித்தரிக்கப்பட்டார். 13-9-1925 ல் பிறந்த திருமதி தட்சர் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று தனது 24 வயதில் கொன்சவேற்றிவ் கட்சியில் சேர்ந்து தன் அரசியல் பாதையை நிர்ணயித்தார். 1970 ம் ஆண்டு கல்வி விஞ்ஞான அமைச்சராக பதவியேற்று, 1975 இல் கொன்சவேற்றிவ் கட்சியின் தலைவரானார். பிரித்தானியாவின் சரித்திரத்திலேயே முதல் பெண் பிரதமராக 1979 ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். 1983 லும், 1987 லும் மீண்டும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டு அரசியலுக்கே அரசியாகி

www.tamilarangam.net



விட்ட திருமதி தட்சர் 11 வருடங்களாக பிரித்தானியாவின் பிரதமராக இருந்துள்ளார்.

திருமதி தட்சரின் பொருளாதாரக் கொள்கையினால் நாட்டில் ஏற்றத்தாழ்வு நிலை ஏற்பட்டது. நாட்டின் வடக்கில் ஏழ்மை, வேலையில்லாத்திண்டாட்டம் போன்ற பிரச்சனைகள் உருவாகியதுடன் தெற்கில் செல்வந்த நிலை மேலும் அதிகரித்தது. திருமதி தட்சரினால் அமுலாக்கப்பட்ட நாட்டுமக்கள் அனைவரும் வரி கட்டவேண்டும் என்ற சட்டத்தை ஏற்க மறுத்த பிரித்தானியர்களினால் வெறுக்கப்பட்டார். அத்துடன் ஐக்கிய ஐரோப்பிய விடயத்திலும் அவரின் மனப்பாங்கு பிரித்தானியாவை மற்றைய ஐரோப்பிய நாடுகளிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதாகவே இருந்தது. இதனால் ஐரோப்பியர்கள் மத்தியிலும் அவரது புகழ் மங்கத் தொடங்கியது. கொன்சவேற்றிவ் கட்சிக்குள் அவருக்கும் மற்றைய உறுப்பினர்களுக்கிடையில் பல கருத்து வேறுபாடுகள் ஏற்படத்தொடங்கின. திருமதி தட்சர் தனது கட்சியினையும், நாட்டையும் பல துண்டுகளாகப் பிரித்துவிட்டார் என பல உலக அரசியல் அவதானிகளால் விமர்சிக்கப்பட்டார். கொன்சவேற்றிவ் கட்சியின் தலைவரை தெரிவு செய்வதற்கான முதற்கட்டத் தேர்தலில் திருமதி தட்சர் தலைவராக வருவதற்கு பெற வேண்டிய வாக்குகளிலும் பார்க்க குறைவான வாக்குகளையே பெற்றார். இதன் பின்பு 22.11.90ல் அவர் தனது இராஜினாமாவை அறிவித்தார். இதனைத்தொடர்ந்து இடம்பெற்ற இறுதிக்கட்ட தேர்தல்களில் எதிர்பார்த்ததிற்கும் மாறாக நிதி அமைச்சராக இருந்த திரு. ஜோன். மேஜர் வெற்றிபெற்று கொன்சவேற்றிவ் கட்சியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு பிரித்தானியாவின் பிரதமரானார்.

www.tamilarangam.net



## நகைச்சுவைத் துணுக்குகள்



ஒரு தொழிலதிபர் தன் செயலாளரிடம் தான் ஒரு கூட்டத்தில் 20 நிமிடங்கள் உரைநிகழ்த்தக்கூடியவாறு ஒரு கட்டுரை எழுதுமாறு பணித்தார். கூட்டம் முடிந்த பின்னர்

தொழிலதிபர் :- நான் உம்மிடம் 20 நிமிடங்கள் பேசக்கூடியவா எழுதச் சொன்னேன். ஆனால் நீர் எழுதிய கட்டுரை யை ஒரு மணிநேரமாக பேசவேண்டியதாயிற்று அத்தோடு என் பேச்சின் பாதியிலேயே சனங்கள் தூங்கிவிட்டார்கள்.... ஏன் அப்படிச் செய் தீர் என்று கோபமாக கேட்டார்.

செயலாளர் :- நான் உங்களுக்கு நீங்கள் கேட்டபடி 20 நிமிடங் பேசக்கூடியவாறுதான் கட்டுரையும் அதன் இரண் போட்டோ பிரதிகளையும் சேர்த்துத் தந்திட்டேன்.

---

ஒரு புத்தகக்கடையில் அலைந்த ஒரு பெண்மணி வாழ்த்து மடல் ஒன்றை வாங்குகிறாள்

பெண்மணி :- இந்த உறைக்குள் இருக்கும் வாழ்த் என்ன எழுதப்பட்டுள்ளது என்று கொஞ்சம் சொல்லமுடியுமா?

கடைக்காரர் :- இதில் ஒன்றும் எழுதப்படவில்லை, வெற்று மடல்தான்.

பெண்மணி :- அதுதான் நல்லது நானும் என் கணவரு ஒருவரோடு ஒருவர் கதைப்பதில்லை

தொகுப்பு :- டொறிஸ். P

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்புள்ள வாசகப்பெருமக்களே எமது சஞ்சிகையான சிறைகள் தொடர்ந்து வெளி வர உங்கள் நல்லாதரவை தந்து இன்றே சந்தாதாரராகுங்கள்.

1 வருடச்சந்தா - FL. 25.00
6 மாதங்கட்கு - FL. 15.00

நெதர்லாந்திற்கு வெளியே
தபாற்செலவு உட்பட $. 20

சந்தா செலுத்தப்படவேண்டிய இலக்கம்:-

BANK : Pancratiusbank, Geerstraat 22 6411NR HEERLEN
NEDERLAND A/C No. 82.17.17.847
giro bank : 1049670

இச்சஞ்சிகையில் வரும் கதைகள்
கவிதைகள், கட்டுரைகள்
யாவும் ஆக்கதாரர்களின்
பொறுப்பேயாகும்
- ஆசிரியர்குழு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பிறரின் மனமறிந்து செயற்படுங்கள்

எல்லோரும், எல்லோரையும் விரும்புவது இல்லை, எல்லோருக்கும் எல்லோரின் செய்கைகளும் திருப்திப்படுத்துவது குறைவு. இதற்காக வேண்டி அனைவரும் விரும்புவதையே நாம் செய்கைகளில் செய்து முடித்து சிறப்பினை பெற்று புகழோடு வாழ்ந்திட்டால் இம்மதிப்பை தரும் என்றாலும் கூட, அடுத்தவர் ஒவ்வொருவரின் மனதையும் பிரித்து அறிந்து செயற்படுவது முடியாத காரியம் ஒன்றே. இருப்பினும் எமக்கு இயன்றளவு அடுத்தவர் மனம் அறிந்து நன்மையை நினைத்துச் செய்து அவருக்கு எம் மேல் ஒரு விருப்பத்தினை ஏற்படுத்திக் கொள்வது சிறப்பாக அமையும்.

---

உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

TAMIL UNION
ACHTER DEN WINKEL. 370
6372. R.V. LANDGRAAF
THE NETHERLANDS

www.tamilarangam.net

எதிர்காலத்தில் நாம் ..... .....

தமிழ் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தல்
தமிழர் ஒன்று கூடல் மண்டபம்
தமிழ்க் கடவுள் ஆலயம் ஒன்று
தரமான சஞ்சிகை ஒன்று

இவற்றுக்கு
எண்ணிக்கையில் குறை
வாக வாழும் எமக்கும் பொருளாதாரம்
போதாது
எனவே
உலக மெல்லாம்
ரந்து வாழும் எம் இனிய தமிழ் மக்களே
உங்களுடைய ஆதரவுகளை எமக்குத் தந்து
எம் சேவை தொடர உங்கள் பங்களிப்
பினை அளியுங்கள்.

— — —

" ஒரு சமூகத்தின் மீது பார்வையாளராக
இருப்பதை விட பற்றுள்ளவர்களாக இருப்பது
மேலானதாகும்."

www.tamilarangam.net

# தமிழ் மன்றம் வழங்கும்
# தைப்பொங்கல் கலை நிகழ்ச்சி

இடம் :- FAN FARE ZAAL
HOOG STRAAT- 191
LANDGRAAF

காலம் :- 19. 01. 1990 சனிமாலை . 6-45 மணி

## நிகழ்ச்சிகள்

* நவயுகத்தினர் வழங்கும்
  பாலஹரிச்சந்திரா [மயான காண்டம்]

* கவிதை
  பொங்கும் உணர்வுகளே....

* எஸ். வி. சி குழுவினரின்
  வில்லுப்பாட்டு

* பரதநாட்டியம்
  திருமதி பத்மினி குணசீலனின்
  மாணவிகள் (இலண்டன்)

மற்றும் பல நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்